# சிட்சை

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

### கட்டுரை - 12



# சிட்சை

## தேவனுடைய குடும்பத்தில் வரும் சிட்சை மற்றும் உபத்திரவம் குறித்த போதகம்

**"இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார்; அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது. ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது." (யோபு 5:17-19)**

"*பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து*" என்ற கட்டளையைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கின்றார்; மேலும் இதே கொள்கையின் அடிப்படையில்தான் அவர் தமது சபையையும் கையாளுகின்றார். அவர் இப்பொழுது அவருடைய பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கின்றார்; இதுவே அவர்களைக் கையாளுவதிலுள்ள அவருடைய உண்மையான நோக்கமாகக் காணப்படுகின்றது. தம்முடைய பரிசுத்தவான்களுக்குப் பாடம் கற்றுக்கொடுப்பதே அவருடைய எண்ணமாகக் காணப்படுகின்றது. இது இராஜ்யத்திற்கான பயிற்சியாகும்; இது நித்தியத்திற்கடுத்த பாடத்தைக் கற்றுக்கொடுக்கின்றது. அப்படியானால், இந்தப் பயிற்சி எத்துணை முக்கியமானதாக இருக்கின்றது! இந்தப் பயிற்சியினைச் சபையானவள் பெற்றுக்கொள்கின்றாள்; இது அவளை நித்திய இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்குகின்றது.

"*அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில், அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது*" (எபிரெயர் 2:10). அப்படியானால் தேவன் இந்தச் "சீர்ப்படுத்துதல்/ discipline" விஷயத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றார் என்பது உறுதியே. இதை அறிந்தவராகவே அப்போஸ்தலன் நீதிமொழிகளை மேற்கோளிட்டு நமக்குப் புத்திமதி கூறியுள்ளார் (எபிரெயர் 12 மற்றும் நீதிமொழிகள் 3). இது புறக்கணிக்க முடியாத அளவுக்கு மிகவும் மேன்மையானதாகவும்,

கண்டுகொள்ளாமல் விடப்படுவதற்கு முடியாத அளவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. இந்தச் "சீர்ப்படுத்துதலில்/discipline" தேவனுடைய குடும்பத்தினர் களுக்குப் பாடம் கற்றுக்கொடுப்பதும், மகிமையைச் சுதந்தரிக்கப் போகின்றவர்களின் ஆயத்தமாகுதலும் உள்ளடங்கியுள்ளது. இந்தச் "சீர்ப்படுத்துதல்/discipline" என்பது, தேவனுடைய குடும்பத்திற்குள் நாம் சேர்த்துக்கொள்ளப்பட்டது முதற்கொண்டு துவங்குகின்றது. இந்த விஷயம் எப்போதுமே கண்களுக்குப் புலப்படும் விதத்தில் காணப்படுவதில்லை; அதேசமயம் இதன் செயல்பாடுகளை நாம் எல்லா நேரங்களிலும் உணர்வதுமில்லை; இது ஜீவனுள்ள நம்பிக்கைக்குள் நாம் ஜெநிப்பிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு துவங்குகின்றது; இது நமது மரணத்தில்தான் முற்றுப்பெறுகின்றது. இந்தச் சீர்ப்படுத்துதல் வாழ்நாள் முழுவதும் நடைபெறும் காரியமாகக் காணப்படுகின்றது; இது தினந்தோறும் மற்றும் ஒவ்வொரு மணிநேரமும் நடைபெறும் சீர்ப்படுத்து தலாகவும், ஓய்வறியாத சீர்ப்படுத்துதலாகவும் காணப்படுகின்றது.

## அது எப்படிப்பட்ட சீர்ப்படுத்துதல்?

(1) தேவனிடமிருந்து வரும் இந்தச் சீர்ப்படுத்துதல், அன்பின் சீர்ப்படுத்துதலாகக் காணப்படுகின்றது. அதன் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கருணை இருக்கின்றது. அதன் வழிமுறைகளினுடைய எந்த ஒரு பாகத்திலும் கோபமோ, பழிவாங்குதலோ மறைந்திருப்பதில்லை. சாதாரணமான பள்ளிக்கூடத்தில் வழங்கப்படும் சீர்ப்படுத்துதல்/discipline என்பது கடுமையானதாகவும், இனிமையற்றதாகவும் காணப்படலாம்; எனினும் குடும்பத்தில் வழங்கப்படும் சீர்ப்படுத்துதல்/discipline அன்பை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே; மேலும், இதை உணர்வதால் வரும் ஆறுதல் என்பது வார்த்தைகளினால் விவரிக்க முடியாததாகும். அன்பு ஒருபோதும் நமக்குத் தீங்கு இழைக்காது; அது தேவையற்ற துயரங்களை அனுமதிக்காது; இதை நாம் உணர்ந்து கொள்வோமானால், பின்னர் தேவனுடைய கைகள் நம்மைக் கடுமையாய்ப் பதம் பார்க்கும்/அடிக்கும் தருணங்களில், நமக்கு அவர்மீது வருவதற்கு வாய்ப்புள்ள கசப்பான எண்ணங்கள்/ குமுறல்கள் குறைந்துவிடும்.

(2) தேவனிடமிருந்து வரும் இந்தச் சீர்ப்படுத்துதல், ஞானத்தின் சீர்ப்படுத்துதலாகக் காணப்படுகின்றது. இச்சீர்ப் படுத்துதலை வழங்குபவர், ஞானமுள்ள தேவன் ஆவார்; **"*தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவன்*" (*உரோமர்* 16:27).** அவர் இப்படிப்பட்ட தேவனாக இருப்பாரானால், அவருடைய நடவடிக்கைகள் அனைத்திலும் எத்தகைய ஆழமான ஞானம் காணப்படும்! நமக்கு இன்னது தேவை என்றும், அதை எப்படி வழங்குவது என்றும் அவர் துல்லியமாய் அறிவார். நம்மில் என்னென்ன தீமைகள் காணப்படுகின்றது என்பதையும், எவ்விதத்தில் அவைகளை அப்புறப்படுத்தலாம் என்பதையும் அவர் அறிவார். அவர் அளிக்கும் பயிற்சி என்பது, திட்டமிடப்படாத ஒரு பயிற்சி அல்ல, மாறாக நுட்பமான திறமை யுடன் மேற்கொள்ளப்படும் பயிற்சியாகும். இதற்கான காலமும், வழிமுறையும் மற்றும் கருவிகளும் தேவனுடைய பூரண ஞானத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன. பொருத்தமான காலம் தெரிந்தெடுக்கப்படுகின்றது; அதுவும் அது சரியான தருணமா கவும், மிகுந்த பிரயோஜனத்தை அளிக்கக்கூடிய தருணமாகவும் காணப்படுகின்றது. திட்டவட்டமான, அதேசமயம் பாதுகாப்பான கருவி தெரிந்தெடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது; இன்னுமாக மிகுந்த பயனளிக்கின்றதும், குறைவான வேதனை கொடுக்கின்றதுமான கருவி தெரிந்தெடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. இப்படியாகத் தேவனிடமிருந்து வரும் சீர்ப்படுத்துதலில் ஞானம் அடங்கியுள்ளது என்பதை அறிகின்றோம்.

(3) தேவனிடமிருந்து வரும் இந்தச் சீர்ப்படுத்துதல், அவரது உண்மையின் (பொறுப்புணர்வின்) நிமித்தமான சீர்ப்படுத்துதலாகக் காணப்படுகின்றது. **"*உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன்*" என்றும், "*நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங் களைக் கற்றுக்கொள்ளுகிறேன்*" என்றும், "*நான் உபத்திரவப் படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்*"** என்றும் தாவீது கூறியிருக் கின்றார் **(*சங்கீதம்* 119:75,71,67).** இவைகள் அனைத்தும் உண்மை யுள்ள (பொறுப்புணர்வுள்ள) தேவனுடைய செய்கையாகும்; அவர் நமக்கு உண்மையுள்ளவராய் இருக்கிறதுபோல, அவர் தமக்கும் உண்மையுள்ளவராய் இருக்கும் தேவன் ஆவார். **"*சிநேகிதன்***

*அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்*" (*நீதிமொழிகள்* 27:6). தேவனுடைய பிள்ளையானவன், உபத்திரவத்தின்போதே, தனது நண்பர்களின் உண்மையினைக் கண்டறிவான். தேவன் மிகவும் உண்மையுள்ளவர் என்பதினால், அவர் நம்மிடம் காணும் ஒற்றைக் குறையைக்கூடக் கண்டுகொள்ளாமல் விடமாட்டார்; அதை நம்மிடத்திலிருந்து அப்புறப்படுத்தும்படியாக, அதை உடனடியாக நமக்கு வெளிப்படுத்துவார். "*பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும்*" என்று தேவன் இஸ்ரயேலருக்குக் கட்டளையிட்டிருக்கின்றார்; மேலும் தாம் கொடுத்த இந்தக் கட்டளையின் பிரகாரமாகவே தேவனும் நடந்துகொள்கின்றார் (*லேவியராகமம்* 19:17). தம் பிள்ளைகளின் பாவங்களைக் கண்டிக்காமல் சகித்துக்கொள்வதற்கு அவர் உண்மையற்ற தந்தை இல்லையே. அவர் நமக்கு நன்மையை அனுப்பும்போதும், தீமையை அனுப்பும்போதும் அவர் நமக்கு உண்மையாகவே இருக்கின்றார்; அவர் நன்மையை அருளும்போது இருப்பதைவிட, தீமையைக் கொடுக்கும் போதுதான் அதிக உண்மையுள்ளவராகவும், அதிகப் பொறுப்புணர்வு உள்ளவராகவும் இருக்கின்றார் என்று சொல்லலாம்! ஒருவன் தன்னால் நேசிக்கப்படும் நண்பனிடம், அவனைக் கண்டிக்கும்விதமாய்க் கடுமையாக ஏதோ ஒன்றைச் சொல்லவோ, அவனுக்குச் செய்யவோ நேரிடும்போது, இது செய்பவனுடைய இருதயத்தை நொறுக்கவே செய்யும்; எனினும் நண்பன்மீது வைத்திருக்கும் அன்பின் காரணமாக, அதை செய்வான். தன் நண்பன்மீது வைத்திருக்கும் அன்பினுடைய உண்மையின் நிமித்தம் அவன் பின்வாங்க மாட்டான்; இப்படிச் செய்தால்தானே அவன் அவனுடைய உண்மையான நண்பனாய் இருப்பான்? இப்படியே சிட்சிக்கும் தேவனும் காணப்படுகின்றார்; அவர் ஆசீர்வதிக்கும்போது உண்மையுள்ளவராகக் காணப்படுகின்றார்; இன்னுமாக அவர் சிட்சிக்கும்போது அதிக உண்மையுள்ளவராகக் காணப்படுகின்றார். இது நிச்சயமாக ஆறுதலான காரியமாகக் காணப்படுகின்றது. இது நமது முறுமுறுப்புகள் யாவற்றையும் தணித்து, நம்முடைய இருதயங்களைச் சமாதானத்தில் ஸ்திரப்படுத்துகின்றது.

(4) தேவனிடமிருந்து வரும் இந்தச் சீர்ப்படுத்துதல், வல்லமையினால் வரும் ஒரு சீர்ப்படுத்துதலாகும். இந்தச்

சீர்ப்படுத்துதலை வடிவமைத்து வழங்கிக்கொண்டிருப்பவர், திணறடிக்கப்பட முடியாதவர் ஆவார் அல்லது தமது திட்டத்தைக் கைவிடுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட முடியாதவர் ஆவார். எவ்விதமான சாதகமற்ற சூழ்நிலைகள் மத்தியிலும், மிகக் கடுமையான எதிர்ப்புகள் மத்தியிலும் அவரால் இச்சீர்ப்படுத்து தலை நிறைவேற்றி முடிக்கமுடியும். அவருக்கு முன் பிரபஞ்சம் அனைத்தும் வழிவிட்டாக வேண்டும். இக்கருத்து அவரது சீஷர்களுக்கு, இச்சீர்ப்படுத்துதல் தொடர்புடைய விஷயத்தில் மிகுந்த ஆறுதலளிக்கும் கருத்தாகக் காணப்படுகின்றது. ஒருவேளை இந்தச் சீர்ப்படுத்துதல் தோல்வி அடையுமானால் . . . ஒருவேளை நாம் இவ்வளவு கஷ்டங்களுக்குள் உட்படுத்தப்பட்ட பிற்பாடு, நம்மைச் சீர்ப்படுத்தும் திட்டத்தில் தேவன் தோல்வி அடைவாரானால் . . . ஒருவேளை சீர்ப்படுத்துதலின் பலனைக் கொடுப்பேன் என்று உறுதியாய்ச் சொல்லமுடியாத தேவனால் நாம் சோதனையின் வேதனைக்குள்ளாக்கப்படுவோமானால், இது சோதனையில் கூடுதல் கசப்பைத்தான் கொண்டுவரும். நம் இருதயங்கள் இயற்கையாகவே கடினமானவை, நம் சித்தங்கள் மிகவும் பிடிவாதமானவை மற்றும் வளைந்து கொடுக்காதவை . . . ஆகையால் இப்படிப்பட்ட நம்முடைய இருதயத்திலும், சித்தத்திலும் (தேவன்) விரும்பிய மாற்றத்தைக் கொண்டுவருவதற்குச் சர்வவல்லமையுள்ள அழுத்தம் ஒன்றே தேவைப்படுகின்றது. ஆவி உள்ளுக்குள் போராடும்போது, மாம்சம் அதன் பலத்தில் எதிர்த்து நின்று பணிய மறுக்கும்போது, தேவன் அருளும் சிட்சையை, அவரது வல்லமை அருளும் சீர்ப்படுத்துதல் என்று/அவரது வல்லமையின் நடவடிக்கை என்று கருதுவது நமக்கு ஆசீர்வாதமான ஓர் உணர்வாகவே இருக்கும். இது அனைத்தும் நன்றாகவே நடக்கும் என்ற நிச்சயத்தை/பெலத்தை நமக்குக் கொடுக்கின்றது; மேலும், "நம்மை அன்புகூர்ந்தவர் வாயிலாக நாம் முற்றும் ஜெயங்கொண்டவர்களாக வேண்டும்" என்பதை அறிந்தவர்களாக, மேற்கூறிய பெலத்தினால் யுத்தத்திற்கு நாம் ஆயத்தமாகுகின்றோம்.

சீர்ப்படுத்தும் நடவடிக்கையின் விஷயத்தில், அன்பு செயல்படுகிறதாக இருக்கலாம் . . . உச்சப்பட்ச அன்புகூடச் செயல்படுகிறதாக இருக்கலாம் . . . ஆனாலும் இப்படிப்பட்ட அன்பு செயல்பட்டும், எந்தப் பலனும் உண்டாகாமல் போகலாம்; ஏனெனில் அன்பினால் பலசமயங்களில் உதவி செய்யமுடியாமல் போய் விடுகின்றது; பலசமயங்களில் நேசிக்கப்படும் நபருக்கு அன்பினால் எதையும் செய்யமுடிகிறதில்லை. அந்த நடவடிக்கையில் ஞானம்கூடச் செயல்படலாம்; எனினும் அந்த ஞானத்தினால்கூடப் பலனை முற்றிலுமாகக் கொண்டு வரமுடியாமல் போகலாம். அசையா பொறுப்புணர்வுகூடச் செயல்படலாம்; எனினும் பலன் வராமல் போய்விடலாம்; ஆசீர்வதிப்பதற்கு என்று எவ்வளவு தீவிர உண்மையோடு முயன்றாலும், பலசமயங்களில் பொறுப்புணர்வு முற்றிலும் திராணியற்றதாகப் போய்விடலாம்; ஆனால் வரம்பற்ற வல்லமை செயல்படும்போது, எல்லாத் தடைகளும் அப்புறப்படுத்தப்பட முடியும் என்றும், ஆசீர்வாதமான அனைத்தும் நிச்சயமாகவே நடைபெறும் என்றும் நாம் நிச்சயம்கொள்ளலாம்.

ஒருவன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் காணப்படுகையில், அவன் அன்புடன் பராமரிக்கப்படலாம், மிகவும் திறமையாகப் பார்த்துக்கொள்ளப்படலாம், மிகுந்த பொறுப்புணர்வோடு கவனித்துக்கொள்ளப்படலாம், எனினும் ஒருவேளை அவனைக் குணப்படுத்தும் வல்லமை ஒன்று இல்லையெனில், ஒருவேளை எல்லாத் தடைகளையும் அப்புறப்படுத்தும் தடையற்ற சக்தி ஒன்று இல்லையெனில் . . . அவன் நம்பிக்கையற்று படுக்கையிலேயே காணப்படுவான்; ஆனால் ஒருவேளை அவனைக் குணப்படுத்தமுடிகிற வல்லமை ஒன்று காணப்படுமானால் . . . ஒருவேளை சகல வியாதிகளைப் பறந்தோடப்பண்ண முடிகிற வல்லமை ஒன்று காணப்படுமானால் . . . தேவைப்படும் பட்சத்தில், மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பும் வல்லமை ஒன்று காணப்படுமானால், இதை அவன் அறிந்திருப்பானானால் . . . எல்லாம் நலமாகவே நடைபெறும் என்று அவன் அறிந்தவனாய் இருப்பான்.

ஓ! என் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, நம்மிடம் செயல்படுவது வல்லமைமிக்க ஒரு சீர்ப்படுத்துதல்முறை என்பதை

நினைவுகூருவதே ஆசீர்வாதமாய் உள்ளது. தேவன் மேற் கொள்ளும் நடவடிக்கைகளின் விஷயத்தில், அவற்றின் சிறு சிறு அம்சங்கள்கூட நிச்சயமாய் வெற்றிகொள்ளும். நமக்குள்ளும், நம்மீதும் செயல்பட்டுக்கொண்டிருப்பது தேவனுடைய சர்வ வல்லமை ஆகும்; இதுவே நமக்கு ஆறுதலாய்க் காணப் படுகின்றது. வல்லமையில் எல்லையற்றவர் நம்மை இறுக்கமாகத் தம் கரங்களில் பிடித்திருக்கின்றார்; அந்தப் பிடியினுடைய அழுத்தத்தை எதுவும் எதிர்க்க முடியாது. தேவன் அன்பானவராக இருக்கின்றார்; அவர் ஞானமுள்ளவராக இருக்கின்றார்; அவர் உண்மையுள்ளவராக இருக்கின்றார்; அதேசமயம் அவர் வல்லமையுள்ளவராகவும் இருக்கின்றார். இதன் காரணமாக தோல்விக்குரிய சாத்தியக்கூறுகள் இருப்பதில்லை. ஒருவேளை இந்த வல்லமை இல்லாதிருந்தால், ஆசீர்வாதத்திற்குரிய எந்த நிச்சயமும் இருந்திருக்காது; ஒருவேளை இந்த நிச்சயம் இல்லாதிருந்தால், நமக்கான ஆறுதல் எவ்வளவு குறைவுள்ள தாகவும், முழுமையற்றதாகவும் இருந்திருக்கும்! நமக்குள்ளிருந்து நம்மைப் பெலப்படுத்தும் வல்லமையின் மூலம், நாம் கேட்பதற்கும் அல்லது நினைப்பதற்கும் மேலாக, திரளான காரியங்களைச் செய்ய வல்லவராக நம்மைச் சிட்சிக்கின்ற தேவன் இருக்கின்றார் (எபேசியர் 3:20). முற்றிலுமான தன்னுடைய இயலாமை குறித்தும், இன்னுமாக ஆவிக்கும், மாம்சத்திற்கும் இடையிலுள்ள போராட்டத்தில் வரும் சோர்வை குறித்தும் புரிந்திருக்கும் ஒருவன், தன்னை எல்லாப் பக்கங்களிலும் மிக இறுகப் பிடித்திருக்கும் தேவனுடைய கரங்களின் வல்லமையைப்பற்றி நினைவுகூருகையில், அவன் "பலமானதொரு ஆறுதலை" அடைகினறான்.

தேவனே வானங்களைப் படைத்து, அதை பிரம்மாண்ட மாய்ப் பரந்து விரியப்பண்ணியுள்ளார்; வானத்தில் நட்சத்திரங் களை அதினதின் பாதைகளில் நடத்துகின்றார்; அவரே ஒளியையும், இருளையும் உண்டுபண்ணினார்; சதாகாலங்களும் நிலைநிற்கும் மலைகளை உண்டுபண்ணினார்; சமுத்திரத்தை எழுப்பி, அமைதலடையப் பண்ணினார்; இந்தத் தேவன்தான் சிட்சையை வழங்குகின்றார். "சிட்சையும், துயரங்களும் காணப்படும் காலங்களில் நமக்கு வெளிப்படும் யேகோவா தேவனுடைய வல்லமையின் ஒவ்வொரு அம்சமும், ஆறுதல் கடந்துவருவதற்குரிய புதுப்புது காரணிகளாக இருக்கின்றன."

தேவனைக்குறித்துப் பார்க்கும்போது, இதுவே அவரது குடும்பத்தில் வழங்கப்படும் சீர்ப்படுத்துதலின் இயல்பாக இருக்கின்றது. அன்பு, ஞானம், உண்மை மற்றும் வல்லமை ஒன்றுசேர்ந்து இச்சீர்ப்படுத்துதலைத் திட்டமிட்டு நடப்பிக்கின்றது. அப்படியானால், இது ஒரு குறையற்ற சீர்ப்படுத்துதலாகும்; முழு நிறைவான சீர்ப்படுத்துதலாகும்; யோசிக்க முடிகிறதைவிட அல்லது விரும்பப்படுகிறதைவிட மிக வெற்றிகரமான ஒரு சீர்ப்படுத்துதலாகும். இவ்விஷயத்தை நாம் இந்தப் பார்வையில் பார்ப்பதே நலம்; ஏனெனில் அப்போதுதான் வாழ்க்கையில் கடந்துவருகின்ற அனைத்திலும் நாம் முழுத்திருப்தி கொள்பவர்களாகக் காணப்பட்டு, "எல்லாவற்றையும் நலம்" என்று உணர்கின்றவர்களாக இருப்போம்.

இப்பொழுது சிட்சையின் விஷயத்தை இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கலாம். தேவனிடமிருந்து வரும்போது, அது எப்படியாக இருக்கும் என்று பார்த்துவிட்டோம். இப்பொழுது, அது நம்மிடத்தில் செயல்படும்போது, எப்படியாக இருக்கும் என்று பார்க்கலாம். தம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதும், தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட குடும்பத்திற்குப் பயிற்சிக்கொடுக்க வேண்டும் என்பதும்தான் சிட்சையை வழங்குவதிலுள்ள தேவனுடைய நோக்கமாக இருக்கின்றது என்று நாம் பார்த்துவிட்டோம்; மேலும் அவர்களது அபூரண நிலையே இச்சிட்சைக்கான அவசியமாயிருக்கின்றது என்றும் நாம் பார்த்துவிட்டோம். இப்பயிற்சியானது, எந்தவிதத்தில் நம்முடைய மனதின்மீது, சித்தத்தின்மீது, இருதயத்தின்மீது, மனசாட்சியின் மீது செயல்படுகின்றது என்பதை ஆராயலாம்.

(1) அது மனதிற்கான பயிற்சியாகும்/training. நாம் இயல்பாகவே தேவனுக்கடுத்த விஷயங்களில் அறியாமையில் காணப்படுபவர்களாகவும், கற்பிக்கப்பட முடியாதவர்களாகவும் இருப்பவர்கள் ஆவோம்; மேலும் இந்த மனநிலையை, நாம் வாழும் செழிப்பான காலங்களின் சௌகரியங்கள் அதிகரிக்கவே செய்கின்றது; தேவன்தாமே இறுதியில் தலையிட்டு, நாம் கற்றுக்கொள்ளும்படி செய்தார். "***பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்***" (நீதிமொழிகள் 29:15). அவர்

சோதனைகளை அனுப்புகின்றார்; அவை கற்றுக்கொள்வதற்கு நம்மை விரும்பப்பண்ணுகின்றது. (நாம் நம்முடைய அறியாமை யைக்குறித்து அறியவந்து, பரத்திலிருந்து போதிக்கப்பட நாடுகின்றோம்). தேவன் போதிக்கும் வேலையைச் சோதனையில் துவங்குகின்றார். நமக்குப் பரிச்சயமான வார்த்தைகளைக் கொண்டதும், மேலோட்டமாகப் புரிந்துவைத்திருந்ததுமான வசனங்களினுடைய ஆழமான அர்த்தங்களை இப்பொழுது நாம் கற்கின்றோம். ஒவ்வொரு வாக்குத்தத்தமும் பிரகாசமான வெளிச்சத்தில் ஒளிர்கின்றது. துயரங்கள் இருக்கும் காலப் பகுதியில் நாம் எத்தனை வேகமாய்ப் படிப்பினைகளைக் கற்றுக்கொள்கின்றோம்! துயரம் புரிந்துகொள்ளுதலுக்குரிய நம்முடைய புலனுணர்வு சக்திகளைத் தட்டியெழுப்பி, வேகமாகப் புரிந்துகொள்ளும் புது ஆற்றலைக் கொடுப்பதுபோன்று தோன்று கின்றது. முன்பு பலவருட காலங்களாகக் கற்றுக்கொண்டதைவிட, துயரத்தின் நாட்களில்தான், நம்முடைய பிதாவின் வார்த்தைகளி லுள்ள "நடைமுறை அறிவைக்குறித்து" அதிகமதிகமாகக் கற்றுக்கொள்கின்றோம். ஓர் ஆழமான அனுபவம், நம்மை வேதவாக்கியங்களினுடைய ஆழங்களுக்குள் அழைத்துச்சென்று, அதன் மறைவான பொக்கிஷங்களை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. "*இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்*; *ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்*;" "*சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்*" (**யோபு** 5:17; **சங்கீதம்** 94:13). நோய்வாய்ப்பட்டு படுக்கையில் காணப்படுகையில் அல்லது துயரத்தினுடைய அழுத்தத்தின்கீழ்க் காணப்படுகையில் மனதிற்கு எத்தகைய தொரு பயிற்சி, எத்தகையதொரு கற்பித்தல் கொடுக்கப் படுகின்றது! "பிதாவிடமிருந்து கற்றுக்கொள்ளும்" ஒருவனுடைய செவிகளுக்கு, ஒவ்வொரு சிறு சோதனைக்கூட, எத்தனை மகத்துவமான மற்றும் பிரம்மாண்டமான காரியங்களைக் கற்றுக்கொடுக்கின்றது! சில சந்தர்ப்பங்களில் சீர்ப்படுத்துதல் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, பலன் நம்மால் கிட்டத்தட்ட உணர்ந்துகொள்ளப்படுகிறதில்லை; நாம் எதுவுமே கற்றுக் கொள்ளவில்லை என்பதுபோன்று நமக்குத் தோன்றலாம்; பிரச்சனைகள் நம்மைத் திகைக்கப்பண்ணுகின்றது. நாம் குழப்பம் அடைகின்றோம், பதட்டம் அடைகின்றோம், எந்தப் பலனும்

வருவதில்லை என்பதுபோன்று தோன்றுகின்றது; பிற்பாடு ஆசீர்வாதமான பலன்களை உணரத் துவங்குகின்றோம். "பக்குவமாய் நிதானித்தல், தேவனுடைய சத்தத்திற்குப் பொறுமை யாய்ச் செவிசாய்த்தல், அவருடைய வார்த்தைகளின்மீது தீவிரமான ஆர்வம் காட்டுதல், அவரது வார்த்தைகளின் பொருளை விரைவாகப் புரிந்துகொள்ளுதல் போன்ற இவைகள் சிட்சையினுடைய கிருபையுள்ள பலன்கள் என்று விரைவில் கண்டுகொள்ளப்படுகின்றது." மனமானது முற்றும் முழுமையான சீர்ப்படுத்துதலுக்குக்/பயிற்சிக்குக் கீழ்ப்படுத்தப்பட்டு/நெறி முறைப்படுத்தப்பட்டு தெய்வீகச் சத்தியத்தின் அறிவிலும், ஆவியிலும் அருமையானதொரு வளர்ச்சியினை அடைகின்றது.

(2) அது சித்தத்திற்கான ஒரு பயிற்சியாகும்/training. சித்தமே "கலகத்திற்கான ஆசனமாய்" இருக்கின்றது. நடைமுறை வாழ்க்கையின் அனுபவத்தில், நம்முடைய பழைய சித்தங்கள் எதிர்ப்பதை உணர்ந்திருக்கின்றோமா? இந்தப் போராட்டம் தொடர்ந்து காணப்படுகின்றது. மாம்சம் ஆவிக்கு விரோதமா கவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் விருப்பங்களைப் பெற்றிருக்கின்றது; இவைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் காணப்படுகின்றது; ஆகையால் நீங்கள் விரும்புவது எதுவோ, அதை உங்களால் செய்ய இயலாது. நாம் தெய்வீகக் குடும்பத் திற்குள் பிரவேசிக்கும்போது, இந்தச் சித்தமானது சரியான திசையில் வளைக்கப்பட்டுள்ளது; எனினும் இது இன்னும்கூடக் கோணலாகவும்/நேர்மையற்றும், பிடிவாதமாகவும்/இணங்க மறுத்தும் காணப்படுகின்றது. அந்தச் சித்தத்தில் கலகத்தன்மை இன்னமும் இருக்கவே செய்கின்றது. சௌகரியமான காலங் களில் சித்தத்தினுடைய இந்தப் பழைய நிலைமை ஒளிந்து மறைந்துக் காணப்படும்; அதன் பலம் நமக்குத் தெரியாமலேயே இருக்கலாம்; அது மறைந்திருந்தாலும், அது தொடர்ந்து இருக்கத்தான் செய்கின்றது. இதை மென்மையாக்கவும், நேராக்கவும் "உலை வெப்பம்" தேவையாயிருக்கின்றது; இதற்கு இலேசான வைத்தியம் போதாது, கடுமையான வைத்தியமே தேவை; கடுமையாய் இருந்தாலும், இது செய்யப்படவே வேண்டும்.

சித்தமே ஆத்துமாவின் கோட்டையாக இருக்கின்றது; ஆகையாலே "தேவன் இந்தச் சித்தத்தை விசேஷமாக குறிவைத்து, சிட்சையை அனுமதிக்கின்றார்." சித்தத்தை மென்மையாக்க அவர் அடுத்தடுத்து தீயை மூட்டுவார்; அதை நிமிர்த்தி நேராக்கும்படிக்கு அடிமேல் அடி கொடுப்பார். நமது சுய திட்டங்களை முழுமையாக நிர்மூலமாக்கி, நாம் தேர்ந்தெடுக்கும் வழிகளின் "பயனற்ற தன்மையை" நமக்குக் காட்டும்வரை, அவரது கை ஓய்வதில்லை. இது நீண்ட காலமாய்த் தொடரும் சோதனைகளில் பிரதானமாய் நிகழ்கின்றது. சித்தத்தை வளைப்பதும், நேராக்குவதும் பெரும்பாலும் நீண்டதொரு செயல்முறையாகவே காணப் படுகின்றது; இந்தச் செயல்முறையின்போது, நாம் ஆழமான பல தண்ணீர்களைக் கடந்துசெல்ல வேண்டியிருக்கும். நீண்டகால சோதனைகள் விசேஷமாக, "சித்தங்கள் மீதே" குறிவைத்து அனுமதிக்கப்படுகின்றன. படிப்படியாகத்தான் நம்முடைய சித்தமானது, தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகக் கொண்டுவரப்படுகின்றது. ஒரு மரத்திலுள்ள தேவையற்ற கிளையினை, நாம் ஒரே வெட்டாக வெட்டி அகற்றிவிட முடியும்; ஆனால் வளைந்திருக்கும் மரத்தை நேராக்க வேண்டுமானால், மாதக்கணக்காக அல்லது வருடக்கணக்காகத் தொடர்ந்து கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்; இதற்குக் காலம் எடுத்துக்கொள்ளும். நமது சித்தங்கள் எவ்வளவு பிடிவாதமான வையாக இருப்பினும், அது கீழ்ப்படிந்தாகவேண்டும்; நமது சித்தங்கள் எவ்வளவு வறட்டு கௌரவத்துடன் இருந்தாலும், அது வளைந்தாக வேண்டும். தேவன், நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்துடன் ஒன்றிணைப்பதுவரையிலும், அதை விடமாட்டார்.

(3) அது இருதயத்திற்கான ஒரு பயிற்சியாகும்/training. விழுந்துபோன மனிதனுக்குள், அவனுடைய இருதயம் தேவனுக்கு உண்மையற்று துடித்துக்கொண்டிருக்கும். நம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்குரிய அவரது கிருபையான அழைப்பை, அதாவது "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்ற அழைப்பை நாம் முதலாவது உணர்ந்து ஏற்றுக்கொண்டபோது,

நமது இருதயத்துடிப்பு சிலவிதங்களில் உண்மையாய் அவருக்குத் துடிப்பவையாக மாறினது; எனினும் இது பகுதியளவு மாற்றமேயாகும். நமது இருதயமானது இன்னும்கூடத் தூசிகளை "மிகப் பாசத்தோடு" பற்றிக்கொண்டு காணப்படுகின்றது; இருதயம் முழுமையாகத் தேவனுடையதாக மாறவில்லை; இப்படியாக இருக்க அனுமதிக்கப்பட முடியாது; "***உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள (நேச வைராக்கியமுள்ள/Jealous) தேவனாயிருக்கிறேன்***" என்று தேவன் தம்மைக்குறித்துக் கூறியிருக்கின்றபடியால், நம்முடைய இருதயமானது அவருக்கென்று உண்மையாய்த் துடித்துக்கொண்டு இருக்கவேண்டுமென்று விரும்புகின்றார் (***யாத்திராகமம்*** 20:5). நம்முடைய உண்மையுள்ள மற்றும் இருதயப்பூர்வமுள்ள அன்பைத்தான் அல்லது நேச வைராக்கியமுள்ள அன்பைத்தான் அவர் விரும்புகின்றார். தம்மையல்லாத பிற காரியங்களுக்காகத் துடித்துக்கொண்டிருக்கும் நம் இருதயங்களுடைய இந்த உண்மையற்ற துடிப்புகளையெல்லாம் அவர் பொறுத்துக்கொள்வதில்லை; இது சரிசெய்யப்படவேண்டும் அல்லது நம் இருதயம் அவருக்கானது அல்ல என்று அவர் விட்டுவிட வேண்டும்; ஆகையால் அவர் சிட்சிக்கின்றார்; மேலும் இது விஷயத்திலுள்ள நமது தவறு என்னவென்று நாம் முழுமையாகப் புரிந்துகொள்ளும்வரை அவர் சிட்சையை நிறுத்துவதுமில்லை. "நம்மைக் கவர்ந்து இழுத்தது ஒருவேளை அழகான ஓர் இலையாக இருக்குமானால், அதை அவர் வெட்டிப்போட்டுவிடுகின்றார்; நம்மை வசீகரித்தது ஒருவேளை பூக்களின் நறுமணமாக இருக்குமானால், அந்தப் பூவை அவர் கத்தரித்துவிடுகின்றார். பூமிக்கடுத்தக் காரியங்களின் உண்மையான நிலையினையும், அவலட்சணத்தையும் நிர்வாணப்படுத்தி நமக்குக் காண்பித்துவிட்டு, பிற்பாடு தம் சர்வ மகிமையின் பிரகாசத்தில் நமக்கு முன் தம்மை வெளிப்படுத்துகின்றார். இப்படிச் செய்து நம் இருதயங்களை வென்றுவிடுகின்றார்; இப்படியாக நம்மைக் கவர்ந்து, அவருக்கு உண்மையாய் இருக்கும்படிக்கு மாற்றிவிடுகின்றார்."

உம் திருமுகந்தனைக் காட்டுமே -
அதன் அழகிய தெய்வீக ஒளிக்கீற்றை, ஒரு கணம் காட்டுமே!
பின்னர் வேறெந்த அன்பையும்

நான் நினைக்கவோ, சிந்திக்கவோ மாட்டேனே.
பின்னர் எனக்கு மற்றெல்லா சிறிய ஒளிகளும் இருண்டுவிடுமே!
மற்றெல்லா மகிமைகளும் மங்கிவிடுமே!
அழகான பூமியும், பிற்பாடு அழகாகத் தோன்றாதே!

உம் திருமுகந்தனைக் காட்டுமே!
பின்னர் பாரமான சிலுவைச் சுமப்பது இலகுவாகிடுமே!
எனது ஒவ்வொரு இழப்பிலும், ஆதாயம் இருக்குமே!
எனது ஒவ்வொரு கவலைகளிலும், அமைதி கிடைக்குமே!
பார சுமை இலகுவாக, வருடங்களும் துரிதமாய்ப் பறந்தோடுமே!
எந்தன் சுமைதனை நான் கீழே வைத்து,
இளைப்பாறுதலுக்குள் நுழையும் வரை . . . . .
இங்கிருக்கும் வாழ்க்கையும் சொற்ப காலமுள்ளதாய்த்
தோன்றுமே!

இது ஓர் எளிமையான செயல்முறையல்ல. இந்தப் பயிற்சி கடுமையாகவும், வலி நிறைந்ததாகவும் காணப்படும்; இப்பயிற்சியின்கீழ் நம் இருதயத்திலிருந்து அநேகந்தரம் "இரத்தமே" வடிகின்றது; எனினும் இந்த அனுபவத்திற்குள் இருதயம் கடந்துசெல்ல வேண்டும்; இந்தப் பயிற்சியினுடைய எந்தப் பாகமும் தவிர்க்கப்பட முடியாது; இருதயமானது முழுமையாக வெல்லப்படுவதுவரையிலும், இப்பயிற்சியானது/ சிட்சையானது முற்றுப்பெறாது. சிட்சிக்கிறவர் இப்பணியை முடிப்பதற்கு முன் தமது கையை நிறுத்திவிட்டால், அன்பு எங்கே போயிற்று என்றல்லவா கேட்கப்படும். அவர் இஸ்ரயேலர்களைக் குறித்து, "அவர்களை விட்டுவிடுங்கள்" என்று கூறியுள்ளார் (மத்தேயு 15:14); இதுதான் அவருடைய அன்பு சம்மதம் தெரிவித்த கடைசி காரியமாகும். அவர் இஸ்ரயேலரிடம் பேசிய கடுமையான வார்த்தைகளில் ஒன்று: "*இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்பட வேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே*" என்பதே யாகும் (*ஏசாயா* 1:5). இதை நினைவில் வைத்துக்கொள்வோமாக; நம்முடைய இருதயத்திலிருந்து நீண்ட காலமாக இரத்தம் வடிந்துகொண்டிருந்தாலும், சோர்ந்துபோகாமல் இருப்போமாக. இதை நினைவில்கொண்டு, நம்முடைய முழு இருதயத்தை அடைவதற்குரிய அவருடைய திட்டத்தில் சந்தோஷத்தோடு

இணைவதன் மூலம், துக்கங்களைக் குறைத்துக்கொள்ள நாடுவோமாக. அவருடைய அன்பு இனிமையானதாகும்; அது என்றென்றும் நிலைத்திருந்து, நம்மைத் திருப்திப்படுத்தும். விரிசலற்ற அன்பிலும், ஐக்கியத்திலும் நாம் யாரோடு நித்திய காலம் செலவிடப் போகின்றோமோ, அவரை இங்கேயே அன்புகூர இப்படிக் கற்றுக்கொள்வது என்பது எத்துணை அற்புதமான காரியமாய் இருக்கின்றது!

(4) அது மனசாட்சிக்கான ஒரு பயிற்சியாகும்/training. நம்முடைய மனசாட்சியினை முற்றிலும் மென்மையானதாக/ உணர்வுள்ளதாக மாற்றுவதே தேவனுடைய நோக்கமாக இருக்கின்றது. பாவத்தின் சிறு தொடுதலை உணருமளவுக்கும் மற்றும் அவரது பரிசுத்தத்திற்காக வாஞ்சிக்குமளவுக்கும் உள்ள உணர்வுள்ள மனசாட்சியினை நாம் பெற்றிருக்க அவர் விரும்புகின்றார். இதை அடைய அவர் உபத்திரவங்களை அனுமதிக்கின்றார்; மேலும் அந்த உபத்திரவங்கள் மனசாட்சி யினைத் தொடுகின்றது. சரெப்தா ஊர் விதவையின் மகனுடைய மரணம், அவளுடைய மனசாட்சியினை உடனடியாகத் தட்டியெழுப்பிற்று; மேலும் அவள், "***எலியாவை நோக்கி: தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா? என்னிடத்தில் வந்தீர்***" என்று சொல்லி அழுதாள் (**1 இராஜாக்கள் 17:18**); ஆகையால் தேவன் சிட்சிப்பதன் மூலம் தம் விரல்களைக்கொண்டு நம் மனசாட்சியினைத் தொடுகின்றார்; தொட்டதின் விளைவாக புதிய மாற்றம் துவங்குகின்றது. ஏதோ தேவன் நம்முடைய இருதயத்திற்குள் உற்றுப்பார்த்து, நுணுக்கமான ஒரு தேடுதலை மேற்கொண்டதுபோன்று நாம் உணர வைக்கப்படுகின்றோம்; மேலும் இந்த உபத்திரவத்தின் வாயிலாக, பாவத்தைப்பற்றின தேவனுடைய மதிப்பீட்டையும் நாம் கண்டுகொள்கின்றோம். பாவம் பற்றின அறிவை, ஓர் அனுபவமாக மாற்றுவதன் மூலம் மனசாட்சியானது போதிக்கப்படுகின்றது; ஒவ்வொரு புது சோதனையிலும் இந்த அனுபவம் மேலும்மேலும் ஆழமடைகின்றது. இந்தக் கடைசி காலங்களில் உணர்வுள்ள மனசாட்சி என்பதே இல்லாமற்போயிற்று. உலகமானது, "மனசாட்சி" என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டிருக்கின்றது; மற்றபடி அதை பற்றி எதுவும் அறியவில்லை. இது மனசாட்சியற்ற

உலகமாகும்; ஒருகாலத்தில் எந்தளவுக்கு மனசாட்சியில் உணர்வற்று இருந்தோம் என்பதைச் சகோதர சகோதரிகளாகிய நாம் அனைவருமே அறிவோம். இதன் காரணமாகவே தேவன் நம்மைச் சிட்சிக்கின்றார். இந்த மனசாட்சிக்கான பயிற்சி என்பது, அநேகர் நினைத்திருப்பதைவிட மிக முக்கியமானதாகும். இதை முடிப்பதுவரையிலும் தேவன் ஓய்வதில்லை! இதை சாதாரணமாக நினைத்துவிட வேண்டாம்; அசட்டையாய் இருக்க வேண்டாம். உணர்ச்சியற்ற மனசாட்சியை உருவாக்கும் எதற்கும் எதிராகப் போராடுவதைத் தொடர்வோமாக. "கண்ணின் மணிபோல், என் மனசாட்சிதனை ஓ! தேவனே துரித உணர்வுள்ளதாக்குமே!"

இப்படியாக தெய்வீகக் குடும்பத்திற்கான சீர்ப்படுத்துதல் காணப்படுகின்றது! அது எப்படிப்பட்ட விதத்தில் நம்முடைய பரம பிதாவிடமிருந்து வருகின்றது என்பதையும், அது எப்படிப்பட்ட விதத்தில் நம்மில் செயல்படுகின்றது என்பதையும் நாம் பார்த்திருக்கின்றோம். இது நல்லதாக இருக்கின்றதல்லவா? நம் உதடுகள் அல்லது இருதயம் ஒரு முறுமுறுப்பையாகிலும் முனங்கத்தக்கதாக அந்தச் சீர்ப்படுத்துதலில் ஏதேனும் காணப்படுகின்றதா? இல்லவே இல்லை! தேவனைப்பற்றி அதிகமதிகமாக நமக்கு வெளிப்படுத்துகின்றதும், அவரது இருதயத்தின் இரகசியங்களை இன்னும் இன்னும் முழுமையாய் வெளிப்படுத்துகின்றதுமான இந்தச் சிட்சையானது, சகிப்பதற்கு எவ்வளவு கடினமாக இருப்பினும், அதற்காக நாம் "ஸ்தோத்திரிக்கவே" வேண்டும். நமக்குள் இருக்கும் தீமைகளை நமக்குக் கண்டுபிடித்துத் தருகின்றதும், நம்மைப் போதிக்கப்படத்தக்கவர்களாக மாற்றுகின்றதும், நம்மைக் கீழ்ப்படிதலுள்ளவர்களாக மாற்றுகின்றதும், மகிமையின் இராஜ்யத்திற்கு நம்மைப் பயிற்றுவிக்கின்றதுமான இந்தச் சிட்சை/பயிற்சி உண்மையில் விலையேறப்பெற்றதேயாகும். அனைத்திற்கும் மேலாக, இது நமது பிதாவினுடைய சித்தமாக இருக்கின்றது; இது அவரையே நம்பியிருக்கும் பிள்ளைகளுக்குப் போதுமானதல்லவா? நாம் எப்படியிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றாரோ, அதை நமக்கு உணர்த்தும் வழிகளில் ஒன்று, இந்தச் சிட்சை/சீர்ப்படுத்துதல் அல்லவா? இந்தச் சிட்சை/சீர்ப்படுத்துதல் என்பது, நம்மை இராஜ்யத்திற்கு வழிநடத்துவதற்குரிய பாதுகாப்பான மற்றும் உறுதியான மற்றும் சிறு தொலைவுள்ள வழியல்லவா?

அவரது கரம் நம்மைச் சிலசமயங்களில் இறுக்கமாக அல்லது சிலசமயங்களில் கடினமாக இறுக்கிப்பிடிக்க வேண்டியதாக இருப்பினும், அந்தக் கரங்கள் இன்னமும் நம்முடைய அப்பாவின் கரங்கள்தானே! நம்மைக் கீழ்ப்படியப் பண்ணத்தக்கதாக சிலசமயங்களில் அவரது குரல் கடுமையான தொனியுடன் வந்தாலும், அந்தக் குரல் இன்னமும் நம்முடைய அப்பாவின் குரல்தானே! ஒரு கணம் நம்மையும், நம் பிதாவையும் பிரிப்பதற்கென்றோ, நம்முடைய பிதாவின் இருதயத்தைக்குறித்து நாம் சந்தேகிப்பதற்கு என்றோ அந்தச் சிட்சையானது/ சீர்ப்படுத்துதலானது வடிவமைக்கப்படவில்லை. சிட்சை புத்திரத்துவத்தின் சோதனைகளில் ஒன்றல்லவா? இச்சோதனை இல்லாமல் நாம் புத்திரர்களாகக் கருதப்பட முடியாது என்றிருக்க, இதை கருத்தில்கொள்ளாமல், நாம் நம்முடைய புத்திரத்துவத் தையும், நம்முடைய பிதாவின் அன்பையும் சந்தேகிக்கலாமா? எல்லாத் தருணங்களிலும் - இன்பத்திலும், துன்பத்திலும் முழு இருதயத்தோடுள்ள மற்றும் சமாதானத்தோடுள்ள நம்பிக்கையை அவர்மேல் நாம் வைக்கவே, தேவனுடைய அன்பானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. இது எப்போதுமே மாறாதது; மேலும் சிட்சை என்பது, இந்த அன்பின் எல்லையற்ற உண்மைக்குறித்த மற்றும் ஆழம்குறித்த தீவிரமான வெளிப்பாடாகும். வலிமையோடும், பலத்தோடும் காணப்பட வேண்டிய தருணங்களில், இந்த அன்பானது தணியுமா அல்லது பின்வாங்கிடுமா? இல்லை! "*கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?*" என்று அப்போஸ்தலன் பெருமிதம் கொண்டதுபோன்று, நாமும் பெருமிதம்கொள்ளத்தக்கதாகச் சோதனைகள் நம்மை வழிநடத்த வேண்டாமா? (உரோமர் 8:35-39). நாம் சிட்சையின்கீழ்க் கொண்டுவரப்படும்போதுதான், நாம் ஆறுதலினுடைய யதார்த்தங்களையும், அன்பினுடைய நிச்சயங்களையும், பரலோக ஐக்கியத்தினுடைய இன்பங்களையும் இதுவரை அறிந்திராத வழிகளில் அனுபவிப்பவர்களாக இருப்போம் அல்லவா?

ஆமென்!!

- Bible Student Archives,1951

# புதுச்சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள்

[ஏப்ரல் - ஜூலை 2025]

# நான் இன்னும் கொஞ்சம் முயன்று பார்க்கின்றேன்

(ஊழியக்காரனாகிய) நான் ரயிலைப் பிடிக்க அவசரமாகப் போய்க்கொண்டிருந்தேன்; ஆனால் அன்று காலை நான் கற்றுக்கொண்ட பாடமானது, மறக்க முடியாத ஒன்றாகும்.

அவள் ஒரு சின்னஞ்சிறு பிள்ளை. அந்தச் சின்னஞ்சிறு பிள்ளை, பனிக்கட்டியான நடைபாதையில், தன்னுடைய சின்னஞ்சிறு கால்களால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு வேகமாக தட்டுத்தடுமாறி நடந்து போய்க்கொண்டிருந்தாள்; இப்படி அவள் நடந்து கொண்டிருந்தபோது, அவள் வழுக்கி கீழே விழுந்துவிட்டாள். அவள் எழுந்துநின்று, மீண்டும் தட்டுத்தடுமாறி நடந்தாள்; மீண்டும் வழுக்கி கீழே விழுந்துவிட்டாள். அவள் இப்படி விழுந்து, இரண்டாம் விசை எழும்பும்போது, உதவும்படிக்கு நான் அவள் அருகில் சென்றேன். அவள் தனது அழகிய நீலநிற கண்களினால் என்னைப் பார்த்து: "நான் விழுந்துவிட்டேன்; கொஞ்சம் வலிக்கின்றது; இன்னும் கொஞ்சம் முயற்சி பண்ணப்போகின்றேன்" என்றாள்.

என்னை உற்சாகமூட்டின சிறு பிள்ளையே! உனக்கு எனது நன்றிகள்! ஏனெனில் முந்தினநாள் இரவில், நான் சில விஷயங்களில் தோல்வியை அடைந்திருந்தேன்; எனது ஆசைகள் அனைத்தும் சின்னாபின்னமாகப் போய்விட்டது; நான் மிகவும் விரும்பின விஷயங்களுக்கு, எல்லாப் பக்கங்களிலிருந்தும் எனக்கு எதிர்ப்புகள் வந்திருந்தது. "இன்னும்கூடக் கொஞ்சம் முயன்று பார்க்கலாமே" என்ற எண்ணம் எனக்கு வரவேயில்லை.

ஆனால் அந்தச் சின்னஞ்சிறு பிள்ளையின் வார்த்தைகள் என் இருதயத்தைத் தொட்டது. எதிர்ப்புகள் மற்றும் தோல்விகளினால் என் மனதிற்குக் கொஞ்சம் வலி ஏற்பட்டது உண்மைத்தான். எனினும், கொஞ்சம்கூட முயன்றால் நலமாயிருக்கும் என்ற எண்ணம் எனக்கு வந்துவிட்டது. பின்னர்

நானும் முயன்றுபார்த்தேன்; எதிர்பார்த்த பலனும் கிடைத்தது.

அதுமுதற்கொண்டு, அச்சிறு பிள்ளையினுடைய வார்த்தைகள் அடிக்கடி எனது ஞாபகத்திற்கு வந்துபோகும்.

"நான் விழுந்துவிட்டேன் . . .
எனக்குக் கொஞ்சம் வலிக்கின்றது . . .
இன்னும் கொஞ்சம் முயற்சி பண்ணப்போகின்றேன்"

- இதுவே கிறிஸ்தவ ஊழியத்தின் அனுபவமாகும்.

- Devotions
Bible Student's Library

**17** **01, மே 2025**

# சக்தி வாய்ந்த பிரசங்கம்

ஓர் ஊழியக்காரன் பற்றின பதிவு பின்வருமாறு:

அந்த ஊழியக்காரன் இளம் சீடர் ஒருவரிடம், "இன்று நாம் வெளியே போய், பிரசங்கம் செய்யலாம்" என்று கூறினார். அவர்கள் இருவருமே மடத்தைவிட்டு புறப்பட்டு, அருகிலிருந்த ஒரு நகரத்திற்குச் சென்றனர். அவர்கள் அங்குமிங்குமாய்க் கடைகளுக்குச் சென்று, சில பொருட்களை வாங்கினார்கள்; போகிறபோது அறிமுகமானவர்கள் சிலருடன் உரையாடினார்கள்; இன்னும் மீதியிருந்த சில வேலைகளையெல்லாம் செய்துமுடித்தார்கள்; பின்னர் எல்லாவற்றையும் முடித்துவிட்டு மடத்திற்குத் திரும்பினார்கள். போதகர், தங்களது பயணத்தின் நோக்கத்தை மறந்துவிட்டார் என்று நினைத்த இளம் சீடர்: "ஐயா, நாம் எப்போது பிரசங்கம் செய்வது" என்று வினவினார். அதற்கு அந்த ஊழியக்காரன் புன்னகைத்தவாறு, "சகோதரனே, நாம் காலை முதற்கொண்டு பிரசங்கம்தான் பண்ணிக்கொண்டிருக்கின்றோம். நம்முடைய சக மனிதர்கள் மத்தியில் நமது செயல்களினாலும், நன்னடத்தையினாலும் நாம் மிகச் சிறந்த பிரசங்கத்தைச் செய்து வந்திருக்கின்றோம்" என்று கூறினார்.

நம்மோடு உறவாடும் மனிதர்கள் நாம் போதிப்பதைக் கேட்கையில், நடைமுறை வாழ்க்கையில் நாம் அவமரியாதையாய் நடந்துகொள்வதையும் மற்றும் பொறுப்பற்ற செயல்களைச் செய்வதையும் காணும்போது முகம் சுளிப்பார்களா அல்லது கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகளைத் தங்கள் மனதில் நினைத்துக்கொள்வார்களா? என்பதைக் கொஞ்சம் நிதானித்துப் பாருங்கள். "நீ விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு."

- Devotions
Bible Student's Library

**18** **01, ஜூன் 2025**

# குணலட்சணத்தை உறுதிப்படுத்துதல்

**"எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்."**
**(எபிரெயர் 12:11)**

இவ்வசனத்தின் கருத்திற்கு, பள்ளிப் பருவத்தின்போது வேதியியல் பாடத்தில் நாம் பயின்ற ஒரு பரிசோதனையானது அருமையாகப் பொருந்துகின்றது. அந்த வேதியியல் பரிசோதனையின்போது அழகானதும், நீல நிறமுள்ளதும், ஒளி ஊடுருவக்கூடியதுமான காப்பர் சல்பேட்/Copper Sulphate எனும் உப்பு கரைசலானது/Solution கொடுக்கப்பட்டு, அதிலிருந்து படிகங்களை உருவாக்கும்படிக்கு நம்மிடம் கேட்டுக்கொள்ளப் படுகின்றது. நாமும் அந்தக் கரைசலைக் கொதிக்கவைத்து, ஆவியாக்கல்/Evaporation மூலம், அதன் அளவை பாதியாக்கு கின்றோம். கொதிக்கவைத்த பின்னரும், அந்தக் கரைசலில் எந்த மாற்றமும் இருப்பதில்லை. பின்னர் அந்தக் கலனை/Container அப்படியே இரவு முழுவதும் வைத்துவிடுகின்றோம். மறுநாள் ஆய்வுக்கூடத்திற்குச் சென்று பார்க்கையில், அங்கு அழகிய படிகங்கள் உருவாகியிருப்பதை நாம் காணலாம். அது எப்படி உருவாகிற்று? கடுமையாய்க் கொதிக்க வைக்கப்பட்ட கரைசல்

குளிர்ந்ததும், இரசாயன பொருட்கள் அதன் இயல்பான நிலையை அடைய முயல்கின்றன; இப்படியாக அந்தப் படிகங்கள் உருவாகுகின்றன.

நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் வரும் வேதனையான அனுபவங்களும் ஏறக்குறைய இந்தப் படிகங்கள் போலவே காணப்படுகின்றன. வாழ்க்கையில் என்ன நடக்கின்றது என்பதை நாம் சுதாரித்துக்கொள்வதற்கு முன்னதாகவே, நாம் ஏதோ சில பிரச்சனைகளுக்குள், ஏதோ சில மன உளைச்சலுக்குள், நம்மால் கட்டுப்படுத்த அல்லது புரிந்துகொள்ள முடியாத ஏதோ சில சூழ்நிலைகளுக்குள் சிக்குண்டவர்களாக, மனக்கொந்தளிப்பிற்கு ஆளாகிவிடுகின்றோம். அச்சூழ்நிலைகள் மத்தியில் நம்முடைய சுயரூபம் வெளிப்பட்டு, நாம் (காப்பர் சல்பேட்/Copper Sulphate எனும் உப்பு கரைசலைப்போல) கொந்தளித்துக் கொதிக் கின்றோம். நம்மிடம் இல்லை என்று நாம் நினைத்திருந்த அல்லது வெகு காலத்திற்கு முன்பே வென்றுவிட்டதாக நாம் நினைத்திருந்த நம்முடைய பெருமை அல்லது வேறு ஏதேனும் ஒரு பண்பு மேற்பரப்பிற்கு வந்து கொதிக்கின்றது; மேலும் கொதித்துக்கொண்டே இருக்கின்றது; ஒருவேளை இது பல மணிநேரங்கள் அல்லது நாட்கள்கூட நீடிக்கலாம்; நாம் நம்முடைய இம்மாதிரியான சுபாவங்களை நாட்கணக்காக அல்லது வருடக்கணக்காக, அதாவது எத்தனை காலங்கள் வெளிப் படுத்திக்கொண்டிருப்பதற்குத் தேவன் அனுமதிப்பார் என்பது அவருடைய விருப்பத்தைப் பொறுத்து இருக்கின்றது. இறுதியில் (நாம் விரக்தியின் விளிம்பிற்கு வந்து) பிதாவின் விருப்பத்திற்கு மாறாக நடந்துவிட்டோம் என்பதை உணர்ந்துகொள்கின்றோம்; நாம் தலைகுனிகின்றோம் மற்றும் நாணமடைகின்றோம். பிற்பாடு நாம் உடனடியாக சில வேத தியானங்களை மேற்கொள் வதினாலோ, சக விசுவாசிகளோடு ஐக்கியம்கொள்வதினாலோ, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் ஏறெடுக்கும் முயற்சிகளினாலோ நல்ல பலன்கள் எதுவும் உடனடியாக வராது. நாம் சிட்சிக்கப்படுவதை உணர்ந்துகொள்கின்றோம். காலங்கள் செல்லச்செல்ல, அந்த அனுபவங்கள், நினைவுகளாக நம்

மனங்களில் பதியப்பெறுகின்றன. பின்னர் முன்பு வந்த அனுபவம் போன்றதொரு அனுபவம்/சூழ்நிலை மீண்டும் வருகின்றது. ஆனால் இம்முறை நாம் அச்சூழ்நிலையினை வேறுவிதமாக அணுகுவோம். முன்பு நம்மை கோபப்படுத்திய அல்லது தடம்புரளச் செய்தவைகள் இனிமேலும் நம்மை பாதிப்பதில்லை. இப்பொழுது நாம் உறுதியுடன் காணப்படு வதைக் காண்போம். ஏன் இவ்வாறு? ஏனெனில் நம்முடைய குணலட்சணம் அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் உறுதியடைந்து பக்குவப்பட்டுள்ளது. எபிரெயர் 12:11-ஆம் வசனத்தில் இடம்பெறும் "ஆகிலும் பிற்காலத்தில்" என்ற பாகம்தான் நம்மிடம் வேலைசெய்துள்ளது. அனுபவத்தின் ஒரு பாகமாகக் காணப்படும் "சிட்சை" எனும் அம்சமானது கண்ணுக்குப் புலப்படும்/வெளியரங்கமான அம்சமாகவும், மிக முக்கியமான அம்சமாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் புற/உணர்வு மனமானது (Conscious mind) வாழ்க்கையின் அனுபவங்களி னால் சரியாகப் பயிற்றுவிக்கப்படும்போதுதான், ஆழ்மனமானது (Subconscious mind) நீதியின் சமாதான கனிகளைக் கொணரும் அதன் அமைதியான மற்றும் யாருக்கும் புலப்படாத பணியினை செய்ய முடியும்; இது அனுபவத்தினுடைய கண்ணுக்குப் புலப்படாத ஓர் அம்சமாகும். கண்களுக்குப் புலப்படாத ஆழத்திலிருந்து நீதியின் சமாதான கனிகள் பின்னர் வெளிப்படுகின்றது. தோல்விதான் மெய்யான வெற்றிக்கான ஒரே பாதையாகக் காணப்படுகின்றது என்பது மற்றுமொரு தெய்வீகப் புதிர்/இரகசியம் ஆகும். இறுதி வெற்றியைப் பெறவேண்டுமானால், அனுபவத்தினுடைய தோல்வி எனும் பாகம் அவசியமாயிருக்கின்றது. 2 கொரி. 12:9 - "அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்."

- The Herald Magazine 1991,1939, 1978

# சில வகையான கிறிஸ்தவர்கள்

- முதலாவதாக, "சோர்வான கிறிஸ்தவர்கள்" (Tired Christians) என்கிற சிலர் இருக்கின்றார்கள். இம்மாதிரியான ஒரு நபரை ஒருவேளை உற்சாகமூட்டினால், இவர் வேலை செய்வார். ஆனாலும் ஓயாமல் புலம்பிக்கொண்டே வேலைகளைச் செய்பவராகக் காணப்படுவார். ஆதலால், அந்த வேலையைச் செய்பவர்களுக்கும் சரி, அதை பார்ப்பவர்களுக்கும் சரி, ஒருவித சலிப்புதான் மிஞ்சும்.

- இரண்டாவதாக, "ஓய்வுபெற்ற கிறிஸ்தவர்கள்" (Retired Christians) என்கிற சிலர் இருக்கின்றார்கள். இம்மாதிரியான ஒரு நபர் தனது பங்கைச் செய்து முடித்துவிட்டதாக நினைத்து, வெறுமனே உட்கார்ந்துகொண்டு, மற்றவர்களைக் குறைசொல்லுவதை/விமர்சனம் செய்வதைத் தொழிலாகக் கொண்டிருப்பார்.

- மூன்றாவதாக, "சௌகரியமான கிறிஸ்தவர்கள்/ரப்பர் டயர் போன்ற கிறிஸ்தவர்கள்" (Rubber-Tyred Christians) என்கிற சிலர் இருக்கின்றார்கள். இம்மாதிரியான ஒரு நபர் பாதை தெளிவாகவும், சாலை சீராகவும் இருந்தால் மட்டும் செயல்படுபவராக இருப்பார்; அதாவது எச்சிரமமும் இல்லாமல் இருந்தால் மட்டும் செயல்படுபவராக இருப்பார்; பிரச்சனை வந்தால் ஒதுங்கிவிடுவார்.

- இறுதியாக, "பின்னடைவை அடைந்த கிறிஸ்தவர்கள்/ பஞ்சரான டயர் போன்ற கிறிஸ்தவர்கள்" (Flat-Tyred Christians) என்கிற சிலர் இருக்கின்றார்கள். இம்மாதிரியான ஒரு நபர் ஒருகாலத்தில் ஊழியத்திற்கடுத்த காரியங்களில்

சுறுசுறுப்பாகவும், உண்மையாகவும், காணப்பட்டிருந்திருப்பார்; ஆனால் இவர் ஒருகட்டத்தில் பின்னடைவை அடைந்திருப்பார்; பிற்பாடு இவர் அதிலிருந்து மீண்டு வராதவர் ஆவார்.

- நாம் இப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவரா?

- Bible Student's Monthly

---

# மறுரூபமாக்கும் சத்தியங்கள்

[தமிழாக்க வெளியீடுகள்]

1. கிறிஸ்தவ திருமணம்
2. முறுமுறுப்பு
3. பாதங்கழுவுதல்
4. பெருமை
5. மன அழுத்தம்
6. குற்றங்கண்டுபிடித்தல்
7. ஜெபம்
8. மன்னிக்க முடியும்
9. ஆவியின் கனி
10. சோர்வு
11. நமது கர்த்தருடைய பாத்திரம்
12. சிட்சை

புதுச்சிருஷ்டிக்கான
சிந்தனை துளிகள்

2024 பிப்ரவரி - செப்டம்பர்
2024 அக்டோபர் - டிசம்பர்
2025 ஜனவரி - மார்ச்
2025 ஏப்ரல் - ஜுலை

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
8428737474; 9442221874